சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:10.04.2023

வா.சா.1 – சக்திவேல்ராஜா த/பெ – ராமசாமிராஜா

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

தாவா சொத்தின் முந்தைய உரிமையாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் உடன் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து 12 வருடங்கள் கழித்து தான் நான் வங்கி ஏலம் மூலமாக கிரையம் பெற்றேன். அந்த ஒப்பந்தம் 2031 வரை உள்ளது. அதில் உள்ள சரத்துகள் என்னை கட்டுப்படுத்தும் என்றால் ஏலம் எடுத்ததிலிருந்து என்னை கட்டுப்படுத்தும். இன்றைய தேதிவரை இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் வாடகைதாரராக தாவா இடத்தில் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். இன்றைய தேதிவரை இந்தியன் ஆயில் கார்ப்பரேசனுக்கு பழைய வங்கி கணக்கை முடித்தபின்பு எனது புதிய வங்கி கணக்கு எண்ணை தரவில்லை என்றால் அவசியமில்லை அதனால் கொடுக்கவில்லை. DD மூலமாக வாடகை செலுத்தியதை என்ன காரணத்திற்காக வாங்க மறுத்தேன் என்ற விவரம் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனுக்கு தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்தேன். பல்வேறு தேதிகளில் எனக்கு அனுப்பிய காசோலையை எந்த முகாந்திரமும் இன்றி நான் திருப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு நான் அப்போது இருந்த இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் டீலரிடம் பிரச்சனை செய்ததால் I.A.492/2014 in OS.140/2014 விருதுநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் என்மீது

வாங்கியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 02.02.2017 ம் தேதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் விளம்பர பலகையை சேதப்படுத்தி ரூ.4,00,000/- மதிப்புள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் உபகரணங்களை சேதப்படுத்தியதாக எனது பெயரில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் அப்போதைய மேலாளர் 03.02.2017 ல் புகார் மனு கொடுத்தார் என்றால் புகார் கொடுக்கவும் இல்லை என்னை விசாரிக்கவும் இல்லை. நான் எதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இரண்டு மூன்று புகார்கள் கொடுத்துள்ளேன். மரத்தை வெட்டிவிட்டதாகவும், என்னை திட்டியதாகவும் இறந்த நபரின் பெயரில் லைசன்ஸ் இருந்தது சம்பந்தமாக புகார் கொடுத்தேன்.மேற்படி புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இரண்டு வழக்குகளில் அவர்கள் பிணை பெற்றுள்ளார்கள். அந்த புகாரினை இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அலுவலர்கள் மீது கொடுத்தேன். என்ன புகார் கொடுத்தேன் என்றால் இறந்த நபரின் பெயரில் லைசன்ஸ் இருந்தது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன். நான் IOC அதிகாரிகள் மீது கொடுத்த புகாரில் உண்மை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எதாவது ஒரு வகையில் சட்டத்திற்கு புரம்பாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெட்ரோல் பங்கை நடத்துவதற்கு பல விதத்தில் IOC க்கு இடையூறு செய்ததால் IOC அதிகாரிகள் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. விருதுநகர் ஊரக காவல் நிலையத்தில் 06.12.2018 ல் 415/2018 என்ற முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்மீது எந்த புகாரும் இல்லை. என்மீது பல புகார் செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அமைதியான

அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் தான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு OS.163/2019 என்ற வழக்கு விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தற்போது இந்நீதிமன்றத்தில் OS.194/2022 ஆக நிலுவையில் உள்ளது என்றால் நான் இடையூறு செய்யவில்லை ஆனால் வழக்கு நிலுவையில் உள்ளது. தாவா சொத்தை பொறுத்து நான் தாக்கல் செய்த OS.102/2019 வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் IOC தாக்கல் செய்த OS.194/2022 வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. OS.102/2019 வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல.